இதுவரை 33 குடும்பங்களுக்கு ரூ. 3 கோடியே 30 லட்சம் வழங்கல்! சாலை விபத்தில் மரணமடைந்த 3 பேரின் குடும்பங்களுக்கு

தி.மு.க. சார்பில் ரூ.30 லட்சம் நிவாரண நிதி!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!







சென்னை, அக். 17 -

மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் அறிவித்தபடி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சாலை விபத்தில் மரணமடைந்த புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வம், விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்திகேயன், கோவை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ்குமார் ஆகிய 3 குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் 30 இலட்சம் ரூபாயினை நேற்று முன்தினம் (15.10.2026) குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.

இதுவரை 33 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.3 கோடியே 30 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரண மடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ் செல்வன், ஈ.ரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.விக்னேஷ், கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம், திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன், விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ், நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார், ஈ.ரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.லிங்கேஸ்வரன், மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.திருப்பதி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து, திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா, திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார், தேனி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ப.மணிகண்டன், ஈ.ரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வி.கோபால கிருஷ்ணன், தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சண்முகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.கார்த்திக் திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முத்து சுரேஷ்ராஜா, விழுப் புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.விக்னேஷ்ராஜ், ஈ.ரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டுபாளையம் பி.சரவணன் மற்றும் சூரம்பட்டி த.விஜயகுமார், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி, ஈ.ரோடு வடக்கு மாவட்டம், பவானி நகரத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார், சேலம் மத்திய மாவட்டம், சேலம், சின்ன கொல்லப்பட்டி சேர்ந்த எம்.செந்தில்குமார், விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம், மாரிச்செட்டிகுளத்தைச் சேர்ந்த வி.ராஜ்கிரண் ஆகிய 30 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த செல்வம் அவர்கள் 28.05.2026 அன்று புதுக்கோட்டை, ஆலங்குடி புதுக்கோட்டை சாலையில் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரி மோதிய விபத்தில் சிக்கியும், விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் மத்திய ஒன்றியத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் அவர்கள் கடந்த 20.03.2026 அன்று திண்டிவனம் - வெள்ளிமேடு, பெரப்பேரி பேருந்து நிறுத்தம் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்ற போது தனியார் பள்ளி வாகனம் மோதிய விபத்தில் சிக்கியும், கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மனோஜ்குமார் அவர்கள், கடந்த 06.02.2026 அன்று பொள்ளாச்சி, திருச்சூர், மீன்கரை ரோடு ஜமீன்ஊத்துக்குளி, ரூபி டிரேடர்ஸ் அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது பொலிரோ ஜீப் மோதி விபத்தில் சிக்கியும் உயிரிழந்த இந்த 3 குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த செல்வம் அவர்கள் மனைவி திருமதி செ.ஜெயந்தி அவர்களிடமும், விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் மத்திய ஒன்றியத்தைச் சேர்ந்த கார்த்திகேயன் அவர்களின் மனைவி திருமதி கே.சியாமளா கௌரி அவர்களிடமும், கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மனோஜ்குமார் அவர்களின் மனைவி திருமதி பிருந்தா அவர்களிடமும் நேற்று முன்தினம் (15.10.2026) காலை வழங்கினார்.

மூடப்பட்ட மதுக்கடைகளை மீண்டும் திறப்பதா?

இரட்டை வேட த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனம்!

முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, அக். 17 -

முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக வெற்றிக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 717 மது பானக் கடைகள் மூடப்படும் என அறிவித்தார் முதலமைச்சர் விஜய்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு சில கடைகள் மூடப்பட்டது.

தற்போது ஓட்டப்பிடாரம் தொகுதி துப்பாஸ்பட்டி வெள்ளப்பட்டி அய்யனார்புரம் கிராமங்களுக்கான பேருந்து நிறுத்தம் அருகே புதிய மதுக்கடையோடு, மனமகிழ் மன்றங்களையும் திறந்திருக்கிறார்கள்.

முன்வாசலை மூடிவிட்டு பின்வாசலை திறப்பதுபோல கடைகளை மூடிவிட்டு பின்னர் புதிதாக மதுக்கடைகளை திறந்து வருகிறது இரட்டை வேட த.வெ.க. அரசு. இதுதான் மதுக்கடைகளை குறைக்கும் லட்சணமா



மிஸ்டர் விஜய்? த.வெ.க. ஆட்சிக்கு வந்தவுடன் மூடிய கடை மீண்டும் திறக்கப்பட்டது ஏன்.. திறக்கச் சொன்னது யார்.. அப்படியென்றால் மூடப்பட்ட 717 மதுக் கடைகளும் மாற்று இடங்களில் மீண்டும் திறக்கப்பட்டுவிட்டதா?

துப்பாஸ்பட்டி வெள்ளப்பட்டி அய்யனார்புரம் ஆகிய மூன்று கிராம மக்களுக்கும் பொதுவான பேருந்து நிலையம் இருக்குமிடத்தில் டாஸ்மாக் கடை செயல்படுவதால் பொது வெளியில் மது அருந்துவது, இருதரப்பு மோதிக் கொள்வது, நடமாடும் சாமானியர்களை அச்சுறுத்தும் சம்பவங்கள் அரங்கேறுவதால் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாகியிருக்கிறது. முன் பக்கம் மதுக்கடையும், அதன் பின் புறம் பார் மற்றும் மனமகிழ் மன்றமும் இருப்பதால் பள்ளி செல்லும் மாணவிகள் பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது.

மதுக்கடையை மூட வேண்டும் என் அப்பகுதி மக்கள் அமைச்சர் பெருமக்களிடமும் மாவட்ட ஆட்சியரிடமும் பலமுறை கோரிக்கை வைத்தும் சாலை மறியல் போராட்டம் நடத்தியும் தங்கள் எதிர்ப்புகளை தெரிவித்து வருகிறார்கள்.

தாசில்தார் தலைமையில் சமாதான கூட்டம் போட்டு ஊர் மக்களிடமும் எட்டு நாட்களுக்கு கடை மூடப்பட்டிருக்கும் பின்பு கடையை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறப்பட்டது.

ஆனால் எந்த உறுதியும் பின்பற்றப்படவில்லை உடனே மறுநாளே பின்வாசல் வழியாக மது விற்பனை ஜோராக நடக்கிறது. சமாதான கூட்டம் போட்டு பொதுமக்களை ஏமாற்றுகிறது இந்த அரசு. நியாயமான கோரிக்கையுடன் போராடும் மக்களின் கோரிக்கைகளை த.வெ.க. அரசு அலட்சியமாக கையாள்வது கடும் கண்டனத்துக்குரியது.

'Don't Close The Tasmac மா... Atleast Open the Back Dooru' என்ற சினிமா பாடல் பாணியில் ரீல்ஸ் ஆட்சி நடத்திக் கொண்டு 'பெண்களுக்கு தாய்மாமனாக இருப்பேன்' என நீங்கள் சொல்லலாமா?

அண்ணனாக, தம்பியாக, தாய்மாமனாக இருப்பேன் என வசனத்தை மட்டும் பேசிக் கொண்டிருக்காமல் துப்பாஸ்பட்டி வெள்ளப்பட்டி அய்யனார்புரம் கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று 10060 எண் கொண்ட மதுக் கடையை உடனடியாக மூட உத்தரவிட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்துகிறேன்!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் குறிப்பிட்டுள்ளார்.

ஏன் ரூ.35க்கு மின்சாரம் வாங்குறீங்க!

3 மாசம்தான் கண்டிப்பா காசியை கண்டுபிடிச்சிடுவோம்!

அமைச்சர் நிர்மல்குமாரின் பதில் அளிக்கும் விதத்தை கிண்டல் செய்யும் நெட்டிசன்கள்!

ஏன் ரூ.35க்கு மின்சாரம் வாங்குறீங்க '3 மாசம்தான் கண்டிப்பா காசியை கண்டுபிடிச்சிருவோம்' - எல்லா கேள்விக்கும் எக்குத்தப்பாக பதிலளிக்கும் அமைச்சர் நிர்மல்குமாரை நெட்டிசன்கள் கிண்டல் செய்து வருகின்றனர்.

சென்னை கோட்டையில் நிருபர்களுக்கு மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் அளித்த பேட்டி:-

நிருபர்: எங்க பார்த்தாலும் மோசமான மின்சார வெட்டு இருக்கே, தலைமைச் செயலகத்துலயே மின்சாரம் இல்லன்னு.....

அமைச்சர் நிர்மல் குமார்: தி.மு.க. ஆட்சில, துறையிலே மோசமான, ஊழலான நிர்வாகத்தாலதான் இந்த நிலைமை. மூணு மாசத்துல

நிருபர்: இதத்தான் மே மாசம் சொன்னீங்க.. மின்சார பில் எக்கச்சக்கமா ஏத்துனீங்க.. ஆனா நிலைமை ரொம்ப மோசமா .....

நிர்மல் குமார்: செந்தில் பாலாஜி பண்ண எல்லா திருட்டுத்தனமும் ஒவ்வொண்ணா பாத்துட்டுருக்கோம்... இன்னும் 3 மாசத்துல...

நிருபர்: ஏற்கனவே சோலார் கம்பெனிகளோட போட்ட அக்ரிமெண்ட் கேன்சல் பண்ணதாலதான் இப்ப பற்றாக்குறைன்னு...

நிர்மல் குமார்: கரூர் கேங் செஞ்ச ஊழல் எல்லாம் ஒவ்வொண்ணா மோப்பம் புடிச்சிட்டு இருக்கோம்.. இன்னும் 3 மாசத்துல....

நிருபர்: ஏன் இப்ப அவசரம் அவசரமா யூனிட் 35 ரூபா கொடுத்து வாங்கறீங்க..?

நிர்மல் குமார்: செந்தில் பாலாஜியோட அடியாள் ஒருத்தர் காசின்னு.. ஓடி ஒளிஞ்சிட்டிருக்காரு... அவர் ஏன் ஒளிஞ்சிட்டு இருக்காரு, அவரைத் தேடிட்டுருக்கோம்...

நிருபர்: இந்த கேள்விக்கு பதில் சொல்லுங்க.. ஆந்திரா, கேரளா எல்லாம் 17 ரூபாய்க்கு வாங்கும்போது, நீங்க ஏன் யூனிட் 35 ரூபாய்க்கு வாங்கறீங்க..?

நிர்மல் குமார்: அந்த காசியை மூணு மாசத்துல கண்டுபுடிச்சி அம்பலப்படுத்துவோம். மூணு மாசம்தான்..

இவ்வாறு அமைச்சர் நிர்மல்குமாரின் பதில் அளிக்கும் விதம் வினோதமாக இருப்பதாக சமூக வலை தளங்களில் நெட்டிசன்கள் கிண்டல் அடித்து வருகின்றனர்.